இரண்டு கோரிக்கைகள் பற்றியும் அரசு என்ன நிலை எடுத்து இருக்கிறது என்பதை உங்கள் மூலமாக நான் இந்த அரசிட மிருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தொடர்பாக அமைச்சரிடத்தில் நீங்கள் நேரடியாகச் சொல்லாமல் இப்படிக் கேட்டால் எந்த அளவுக்கு விளக்கம் சொல்ல முடியும். இதைக் கவன ஈர்ப்பாகக் கொடுத்து இருந்தால் அதற்குப் பதில் வாங்கித் தந்து இருக்கலாம்.

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திடீர் என்று தன்னுடைய மனதில் படுகிற அல்லது தான் அறிந்து இருக்கிற ஒரு பிரச்சினையை இந்த அவையில் எழுப்பினால் தகுந்த, நியாயமான விளக்கத்தை அமைச்சரவையின் சார்பில் நாங்கள் யாரும் தரக்கூடிய வாய்ப்பு இருக்காது. மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவையில் ஏதாவது எதிர்பாராத ஒரு சூழ்நிலையில் ஏதாவது ஒன்றைக் குறித்து கேட்க வேண்டுமானால், கேட்டால் ஏதோ முடிந்த அளவுக்கு அதுபற்றி நாங்கள் பதில் சொல்லமுடியுமே தவிர அரசின் துறைகள் ஆய்வு நடத்தி முடிவு எடுக்கவேண்டிய பிரச்சினைகள் பற்றி நாங்களே அமைச்சர்களாக எதையும் சொல்ல நேரிட்டு அதன் காரணமாக அஷ்யூரன்ஸ் என்ற நிலைமை ஏற்பட்டுவிடுமானால், அது உள்ளபடியே நாங்கள் அவையினுடைய கண்ணியத்தைக் காப்பாற்றுவதற்கு ஏதுவாக இருக்காது. எனவே இப்படிப் பட்ட கருத்துக்களுக்கு உண்மை நிலைமை தெரிந்து விளக்கம் தரக்கூடிய நிலைமை இப்போது இல்லை என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(உ) கோவை சிறையில் இருந்த முன்னாள் பஞ்சாப் முதல்வர் பாதல் வேறு மாநிலத்திற்குக் கொண்டு போகப்பட்டு உள்ளதாக வந்துள்ள செய்தி குறித்து.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபா நாயகர் அவர்களே, இன்றையதினம் நம் கோவை ஜெயிலி லிருந்து பஞ்சாப் மாநில முதலமைச்சர் திரு. பிரகாஷ் சிங் பாதல் அவர்களை வேறு இடத்திற்கு. . . .

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : பாயின்ட் ஆஃப் ஆர்டர். அவர் இப்போது முதலமைச்சர் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் என்ன பிரச்சினை இருக்கிறது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : அவரை வைத்து சமாளிக்க முடியவில்லையா என்ன?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது Routine Work. இதை நீங்கள் அலுவலகத் தொடர்பானதில் பேச முடியாது.

(ஆ) எதிர்க்கட்சி உறுப்பினர் தாக்கப் பெற்றதாகக் கூறப்படுவது குறித்து— தொடர்ச்சி.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, தங்களிடமிருந்து நான் ஒரு அன்பான பதிலை எதிர் பார்க்கிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர் தாக்கப்பட்டு இருக்கிறார் என்கின்ற மன வேதனையைக் கூட அவர்கள் வெளிப்படுத்த விடாமல், வெளிப்படுத்துவதற்கு அனுமதித்து இருக்கலாமே என்பது தான் என்னுடைய கருத்தாக இருக் கிறது. அவர்கள் அடிபட்டிருக்கிறார்கள் என்பதை அவர் வேதனையோடு சொல்ல விரும்புவதால் இங்கே சொல்ல அனுமதித்திருந்தால் அந்த வெளிநடப்புக் கூட நடந்து இருக் காது என்று நான் கருதுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் உங்களுடைய அனுமதியோடு அந்த படம் காட்டப்பட்டது. அந்தப் படத்தை அவர்கள் பார்த்தார்கள், நான் பார்க்கவில்லை, எனவேதான் என்னுடைய கருத்தை நான் இங்கே வெளியிடுகிறேன்.

(முற்பகல் 10-10).

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, அடிபட்டு இருக்கிறார் என்று ஒரு உறுப்பினர் சொல்கிறார். அடிபட்டு இருக்கிறாரா என்பது அர சாங்கத்திற்குத் தெரியாது. எனவே, தெரியாத நிலையில், படத்தைப்பார்த்தால் அடி சரியாக விழவில்லை (குறுக்கீடு). படத்தில் பார்த்தால் அடி விழவில்லை. படத்தைப பார்த்து சொல்ல முடியாது. நிலைமைகளை ஆய்ந்துதான் சொல்ல வேண்டும். எனவே, அப்படிப்பட்ட நிலையில் இந்த அரசு ஒரு பக்க சார்பாக ஒரு கருத்தைச் சொல்லிவிட்ட குற்றத் துக்கு ஆளாகக் கூடாது. அப்படி ஆளாகின்ற வகையில் எந்தக் கருத்தையும் இந்த அவையில் எதிர்பாராத நேரத்திலே எடுத்து வைப்பது முறையல்ல. (குறுக்கீடு). காட்டப்பட்ட படத்தைக் கொண்டு எங்களால் அப்படித் தீர்மானிக்க முடியவில்லை.

4. ஒத்திவைப்புத் தீர்மானம்

மாநிலத்தின் பல பகுதிகளில் மின் பற்றாக் குறையினால் ஏற்பட்டுள்ள பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் என். பழனிவேல், எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், கோ. பூவராகன் ஆகியோர் ''தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் நிலவி